**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

<u>அசல் வழக்கு எண்.174/2020</u>

**<u>CW1</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு.தேவகி, Grade III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு நீ.ம.சா 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். திரு.செந்தில்குமரன்<br>வயது. | நாள்.**23.01.2026** |
| த/பெ. திரு.செல்வமணி | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>நீ.மா.சா.**1** அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. நான் இந்த வழக்கில் இடைக்கால மனு எண்.377/2018 ல் பிறப்பித்த உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டேன். மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தாவா சொத்தை பார்வையிட்ட என்னுடைய அறிக்கை மற்றும் வரைபடத்தை ஏற்கனவே தாக்கல் செய்து அது நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எனக்கு அளிக்கப்பட்ட வாரண்டில் ஏ அட்டவணை சொத்துக்கு ரோட்டில் இருந்து பி அட்டவணை சொத்தை தவிர வேறு பாதைகள் உள்ளதா என்று பார்க்க சொல்லி குறிப்பிட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் வாரண்டில் ஏ அட்டவணை சொத்துக்கு செல்வதற்கு வேறு எதாவது பாதை உள்ளதா என்று தான் பார்க்க சொல்லப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்த நீ.ம.சா.ஆ.2 ல் கிழக்கு பக்கம் வடக்கு தெற்காக ரோடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ரோட்டுக்கு மேற்கில் சர்வே எண்.231/7 பி உள்ளது. அதற்கு ஒட்டினாற்போல் மேற்கு திசையில் 7 ஏவும்

அதை அடுத்த மேற்கில் 8 சியும் என்று உள்ளது. அதை அடுத்த மேற்கில் 8 பியும் அதை அடுத்த மேற்கில் 11 ம் உள்ளது.

தாவா ஏ அட்டவணை சொத்துக்கு செல்வதற்கு 7 ஏ மற்றும் 8 சி வழியாக தான் செல்ல முடியும். ஆனால் 7 ஏ மற்றும் 8 சி சொத்தில் வாதி சொல்வது போல் பாதை எதுவும் இல்லை. ஏ அட்டவணை சொத்தை அடைய வேறு பாதை உள்ளதா என்று எனக்கு அளிக்கப்பட்ட வாரண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாரண்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏ அட்டவணை சொத்தை அடைய வேறு பாதை உள்ளதா என்பதை பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னுடைய அறிக்கையில் 3 வது பத்தியில் கடைசி வரியில் சி அட்டவணை சொத்தில் F, E, A, D வரையாக பாதை உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

ஏ அட்டவணை சொத்துக்கு ரோட்டில் இருந்து செல்வதற்கு பி அட்டவணை சொத்தை தவிர வேறு பாதை உள்ளதா என்றால் வேறு பாதை இல்லை என்று என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். நான் சொத்தை பார்வையிட்ட போது பி அட்டவணை சொத்தின் வடக்கு புறத்தில் மட்டும் தான் பூஞ்செடி நடப்பட்டு இருந்தது என்றால் பிஅட்டவணை சொத்தில் முதல் இன சொத்தில் மல்லிகை பூவும் மற்றும் மிளகாய் பயிர் இடப்பட்டுள்ளது. இரண்டாம் இன சொத்தில் முழுமையாக மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. மூன்றாம் இன சொத்து கிணறு மற்றும் மோட்டார் பம்ப் செட் உள்ளது.

நான் பார்வையிட சென்றபோது வாதி பாதை கேட்கும் பகுதியில் மட்டும் தான் பூஞ்செடி நடப்பட்டு இருந்தது என்றாலும் நான் தவறாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு ஏ அட்டவணை சொத்துக்கு செல்ல வேறு பாதை இருக்கிறதா என்று குறிப்பிட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை என்னுடைய அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தில் உள்ள பூஞ்செடியின் வயதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>,

தாவா சொத்தை பார்வையிடுவதற்கு முன்பு இரு தரப்பிலும் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலனை செய்ய வேண்டும் என வாரண்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தான் சொத்தை அளவீடு செய்தேன். வருவாய் ஆவணமான புல வரைபடத்தில் தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்தில் வழி எதுவும் இல்லை என்றால் சொத்தை உட்பிரிவு செய்து வழி காட்டப்படவில்லை.

நான் வழக்கு சொத்தை பார்வையிட்டபோது தாவா ஏ அட்டவணை சொத்தில் 3 வது இன சொத்தை தவிர்த்து மற்ற இன சொத்துக்களிலோ பி அட்டவணை சொத்திலோ எவ்வித வழியும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சி அட்டவணை சொத்தே ஏ மற்றும் பி அட்டவணை சொத்தில் இல்லை என்றால் அது பாதையாக இல்லை பயிரிடப்பட்ட நிலமாக உள்ளது.

பி அட்டவணை சொத்தில் பாதை இல்லாததால் தான் இந்த வழக்கில் உள்ள சி அட்டவணை சொத்தை அடையாளம் கண்டு அளவீடு செய்ய முடியவில்லை என்றால் பாதையும் இல்லை அளவுகளும் வாரண்டில்

உள்ளவாறு இல்லை. அந்த பகுதி வாரண்டில் குறிப்பிட்டவாறு ஒரே நீளமாக இல்லாமல் ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது.

வழக்கில் ஏ அட்டவணை சொத்தில் மண் பாதையோ, வண்டி பாதையோ இருந்ததால் என்றால் இல்லை. நான் பார்க்கும்போது சர்வே எண்.231/7 பி யில் மட்டும் தான் பாதை இருந்தது. 7 பியில் நான் பார்க்கும்போது என்ன பயிர் இருந்தது என்றால் 7 பியில் என்னுடைய மாதிரி வரைபடத்தில் பச்சை வண்ணம் இட்டு காட்டப்பட்ட பகுதியில் மாட்டு தீவனம் புள் பயிரிடப்பட்டிருந்தது. அதில் 8 தென்னை மரங்கள் உள்ளது. ஏ அட்டவணை சொத்திற்கு பி அட்டவணை சொத்து வழியாக தான் செல்லலாம் ஆனால் வழி எதுவும் இல்லை என முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். ஆனால் ஏ அட்டவணை சொத்தை தவிர பி அட்டவணை சொத்தை தவிர்த்து அதன் அருகில் உள்ள மற்ற சொத்துக்களின் வழியாக செல்ல முடியும் என்றால் வாரண்டில் குறிப்பிட்டுள்ள வழி பார்த்ததில் வேறு பாதை இல்லை. (நீதிமன்ற கேள்வி அருகில் உள்ள சொத்துக்களில் ஏ அட்டவணை சொத்துக்கு செல்வதவற்கு வேறு பாதை எதாவது உள்ளதா என்றால் தாவா சொத்தை ஓட்டி ஏ அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு வேறு எந்த பாதையும் இல்லை).

தாவா சொத்துக்கு கிழக்கு பகுதியில் உள்ள மண் ரோட்டில் இருந்து பி அட்டவணை சொத்தை தவிர்த்து அருகில் உள்ள நிலங்கள் கரம்பாக இருக்கும்போது ஏ அட்டவணை சொத்துக்கு போக முடியும் என்றால் அருகில் உள்ள சொத்துக்கள் வழியாக போகமுடியும் என்று என்னால் அறுதியிட்டு கூறமுடியாது.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open
read over to the witness and
acknowledged by him/her to
be correct.
Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)